பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
02 07 2025 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பரமக்குடி – ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றும் திட்டம், தமிழகத்தின் வளர்ச்சிக்கான மகத்தான முடிவு என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மத்திய அமைச்சரவையின் முடிவு, தென் தமிழகத்தின் பொருளாதாரம், சுற்றுலா மற்றும் போக்குவரத்துத் துறைகளை மேம்படுத்தும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. சரக்கு மற்றும் சேவை வரி தொழில்முனைவோருக்கு பாதுகாப்பாக உள்ளது என்று மகாராஷ்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

4. திருப்புவனம் காவல் நிலையத்தில் இளைஞர் மரணமடைந்த சம்பவம் குறித்த வழக்கு விசாரணையை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

5. மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா, இங்கிலாந்து அணியை 24 ரன் வித்தியாசத்தில் வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பரமக்குடி – ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றும் திட்டம், தமிழகத்தின் வளர்ச்சிக்கான மகத்தான முடிவு என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த சாலையை ஆயிரத்து 853 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்த மத்திய அமைச்சரவை மேற்கொண்ட முடிவு குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த சாலை விரிவாக்கத்தின் மூலம் இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைத்து பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுலா மேம்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பரமக்குடி - ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதென்ற மத்திய அமைச்சரவையின் முடிவு, தென் தமிழகத்தின் பொருளாதாரம், சுற்றுலா மற்றும் போக்குவரத்துத் துறைகளை மேம்படுத்தும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மதுரை - தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் 46 புள்ளி 7 கிலோ மீட்டர் தொலைவுக்கு நான்கு வழிச்சாலை அமைக்கப்படுவதன் மூலம் மதுரை விமான நிலையம் உச்சிப்புளி கடற்படை விமான தளம், ராமேஸ்வரம் மற்றும் பாம்பன் துறைமுகங்கள் மற்றும் இப்பகுதியில் உள்ள ரயில் நிலையங்களுக்கான போக்குவரத்து இணைப்பு வசதி மேம்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்போது நேரடியாக 8 புள்ளி 4 லட்சம் மனித வேலைநாட்களும், மறைமுகமாக 10 புள்ளி 5 லட்சம் மனித வேலைநாட்களுக்கான வாய்ப்பு உருவாவதுடன், தினந்தோறும் 12 ஆயிரத்து 700 வாகனங்கள் சென்றுவர உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரிக்கு தமிழக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதாவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துளார்.

புதிய குற்றவியல் சட்டங்கள், நீதிமன்ற நடவடிக்கைகளை, மக்கள் குறைந்த செலவில் எளிதில் அணுகக்கூடியதாக மாற்றியுள்ளன என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இந்த 3 சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவுறுவதைக் குறிக்கும் வகையில் புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையிலான மத்திய அரசு, சமூகநீதி, பொருளாதாரம் மற்றும் அரசியல் நீதி அடிப்படையிலான ஆளுகையில் ஒரு பொற்காலத்தை ஏற்படுத்தி உள்ளது என்றார்.

நாட்டின் குற்றவியல் நீதி நடைமுறை, உண்மையான நீதி வழங்கப்படுகிறது என்ற நம்பிக்கையை மக்களிடையே ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விட்டாலே அது உடனடி நீதிக்கு வழிவகுக்கும் என்ற உணர்வை ஏற்படுத்தும் என்று கூறிய திரு. அமித் ஷா, புதிய குற்றவியல் சட்டங்கள், வரும் காலங்களில் நாட்டின் குற்றவியல் விசாரணை முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி, தொழில்முனைவோருக்கு பாதுகாப்பாக உள்ளது என்று மகாராஷ்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று ஜி.எஸ்.டி. தின கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசிய அவர், முந்தைய ஆண்டுகளைவிட கடந்த ஆண்டு ஜி.எஸ்.டி. வசூல் இரட்டிப்பாகி இருப்பது இத்திட்டத்தின் பலனை உணர்த்துவதாக கூறினார்.

இத்திட்டத்தால் சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்படுவதாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் அதிக அளவில் சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தும் நிறுவனங்களுக்கு விருதுகளையும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

<<<<>>>>

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல் நிலையத்தில் இளைஞர் மரணமடைந்த சம்பவம் குறித்த வழக்கு விசாரணையை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விசாரணையின்போது காவலர்கள் நடத்திய தாக்குதல்தான் இளைஞர் அஜித்குமாரின் மரணத்திற்கு காரணம் என்பதை அறிந்து மிகவும் வேதனை அடைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக 6 காவலர்கள் உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருப்பதுடன், 5 பேர் கைது செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்

மேலும் மாவட்ட கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

இது தொடர்பான வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற மதுரை கிளை, சி.பி.சி.ஐ.டி., விசாரணையை தொடரலாம் என்று தெரிவித்துள்ளபோதிலும் வழக்கின் விசாரணை குறித்து எவ்வித ஐயமும் ஏற்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிபி.ஐ. விசாரணைக்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் முதலமைச்சர் உறுதியளித்துள்ளார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டத்தில் இருந்து கனிம வளங்கள் கடத்தப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

தென்காசியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தென்காசி வழியாக கனிம வளங்களை அளவுக்கு அதிகமாக எடுத்துச் செல்ல ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

பெரிய தொழிற்சாலைகள் ஏதும் இல்லாத விவசாயத்தையே வாழ்வாதாரமாக கொண்டுள்ள இம்மாவட்டத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு விழாவையொட்டி யாகசாலை பூஜைகள் தொடங்கியுள்ளது.

இக்கோவிலில் வரும் 7ஆம் தேதி குடமுழுக்கு விழா விமரிசையாக நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Lakshmanan – 50 Sec)**

<<<<>>>>

தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் நாமக்கல் மாவட்டத்தில் ஏழாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்று தொடங்கி 21 நாட்கள் நடைபெற உள்ளது.

மொத்தம் 105 குழுக்கள் அமைக்கப்பட்டு கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

துருக்கியில் அதிபர் திரு. எர்டோகனின் எதிர்ப்பாளர்கள் 157 பேர் ஊழல் மற்றும் டெண்டர் முறைகேடு குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ஆஸ்திரேலியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் வீசிய சக்திவாய்ந்த சூறாவளி காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

இந்தியாவும் - பாகிஸ்தானும் இருநாட்டு சிறைகளில் உள்ள சிவில் கைதிகள் மற்றும் மீனவர்களின் பட்டியலை பரிமாறிக் கொண்டுள்ளன.

<<<<>>>>

பஞ்சாபை சேர்ந்த 6 வயது சிறுவனான **Teghbir Singh,** மவுண்ட் **Elbru** சிகரத்தை ஏறிய இளம் மலையேற்ற வீரர் என்ற உலக சாதனையை படைத்துள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் அரசுப் பேருந்துகளில் 150 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் பயணம் செய்யும் பயணிகளுக்கு 15 சதவீத கட்டணம் குறைக்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

சிதம்பரம் அருள்மிகு நடராஜர் கோவில் ஆணித்திருமஞ்ன விழா இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தனியார் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட சேக்குப்பேட்டை சாலியர் தெரு நியாயவிலைக் கடையில் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்துக்கு எதிரான 2வது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 24 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**Bristol**-ல் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 181 ரன் எடுத்தது.

182 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 7 விக்கெட் இழப்புக்கு 157 ரன் மட்டுமே எடுத்தது.

5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

<<<<>>>>

உலக குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் சாக்ஷி, **Lakshya Chahar** மற்றும் **Jaismine Lamboria** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<>>>>

ஹைதராபாதில் நடைபெற்ற எலைட் மகளிர் குத்துச்சண்டைப் போட்டியில் அசாமைச் சேர்ந்த **Lovlina Borgohain** தங்கப் பதக்கமும், தெலங்கானாவைச் சேர்ந்த நிகத் ஸரீன் வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.

**<<<<The End>>>>**